Registered No. M-4345.

யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ஆண்டு ஏப்ரல்மீ 19உ, சனிக்கிழமை. [இதழ் ந. 5.

வாரச் செய்திக் குறிப்புகள்.

1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

சென்றவாரம், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை, ஜெர்மனியின் கப்பல்கட்டும் வடக்குக் கரையோரப் பட்டணமாகிய கீல் என்ற இடத்தின்மேல், ஐந்து மணிநேரம் விடாமல் வெடிகுண்டுகளைப் போட்டது. நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள வெடிகுண்டு களை, கடலுக்குள் செல்லும் 'சப்மரீன்' என்ற கப்பல் கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் கப்பற்சாலைகள் மேல் போட்டதனுல், பல பாகங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டது. கீல் விரிகுடாவின் வடக்கு பாகம் பாதி வரைக்கும் ஒரே புகையாயிருந்த தென்று ஆகாய விமானிகள் அறிவிக்கிருர்கள்.

பிரெமர் ஹேவன் என்பது கீல் கால்வாய்க்கு தென் மேற்கில் உள்ள ஜெர்மன் கடற்கரைப் பட்டணம். எம்டன் என்பது ஜெர்மனியின் வடமேற்கில் உள்ள ஒரு முக்கியமான கடற்கரைப்பட்டணம். இந்த இரண்டு இடங்களையும் பிரிட்டிஷ் ஆகாய விமானங் கள் நன்ருகத் தாக்கின. 30,000 நெருப்பு குண்டு கள் போடப்பட்டன. ஒரு இரவிலேயே, இவ்வளவு நெருப்பு குண்டுகளும், நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள வெடி குண்டுகளும், ஜெர்மனியின்மேல் போட்டது இதுதான் முதற்தடவை. நூற்றுக்கணக் கான ஆகாய விமானங்கள் இந்தச் சண்டையில் ஏராளமான சேதம் விளைவித்தன.

கீல் என்ற பட்டணத்தை மீண்டும் பிரிட்டிஷ் விமா னங்கள் தாக்கின. ஒரு சதுர மைல் விஸ்தீரணத் திற்கு நெருப்புப்பற்றிக் கொண்டு எரிந்தது. கடலி லிருந்து அதிக தூரம் வரைக்கும் நெருப்பு தெரிந் தது. நெருப்பு மிக அதிகமாக இருந்ததால், எந்த நெருப்பணைக்கும் படையும் அந்த நெருப்பை அணைத்திருக்கமுடியாது. "நெருப்பை அணைத்து விடவேண்டுமென்ருல், அந்த முழுப்பட்டணத்தை யும் கடலுக்குள் தள்ளிவிட்டால் தான் முடியும்" என்று ஒரு ஆகாய விமானி கூறியது நெருப்பின் அளவைக்காட்டுகிறது.

ஜெர்மனியின் தலைநகரமான பர்லினின்மேல் மூன்று மணி நேரம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. கீல் என்ற இடத்தைத் தாக்கியதைப்போல் இல்லாவிட்டாலும், பர்லினை விமானங்கள் நன்ருய்த் தாக்கின. பர்லினைத் தாக் கியது இதைச் சேர்த்து இந்த யுத்தத்தின் 39-வது தடவையாகும். இதைப்பற்றி, ஜெர்மனியின் அர சாங்கச்செய்தி அறிக்கை கூறுவதாவது:—''சென்ற இரவு, பர்லின்மேல் அதிவிரைவாக வெடிக்கும் வெடி குண்டுகளும், நெருப்புக்குண்டுகளும் போடப் பட்டன. அநேகர் இறந்துவிட்டார்கள் ; பலர் காய மடைந்தார்கள்.''

ஜெர்மனிக்கு வெளியே அநேக இடங்களைப் பிரிட் டிஷ் விமானப்படை சென்ற வாரத்தில் தாக்கியிருக் கிறது. அவையாவன:—டென்மார்க், அதன் கீழ் நாடுகள், வடக்குக் கடலிலிருக்கும் கப்பல்கள், செர் போர்க் என்ற கப்பல் கட்டும் சாலை ; தெற்கு யூகோஸ்லாவியா ; தெற்கு நார்வேயில் அலுமினிய தொழிற்சாலை ; பிரெஸ்ட் என்ற ஜெர்மன் கப்பற் படை ஸ்தலம் ; பிரான்சில் மெரிநாக் ஆகாய விமானச்சாலை, ரூர்பிரதேசம் ; பல்கேரியாவின் தலை நகரமான சோபியா ; பெட்ரிச் என்ற பட்டணம் முதலியன.

ஜெர்மன் ஆகாய விமானங்கள் சென்ற வாரம் பிரிட்டனின் பல பாகங்களின் மேல் வெடிகுண்டுகள் போட்டன. பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் அவை களைத் துரத்தி, ஐந்து விமானங்களை சுட்டு வீழ்த்தி விட்டன.

லண்டன்மேல் போட்ட ஒரு வெடிகுண்டு, வயதான வர்களுக்காக வைக்கப்பட்ட ஆஸ்பத்திரியில் விழுந்த தனுல் ஒரு நோயாளி உயிரிழந்தார்; இரண்டு பேர் படுகாயமடைந்தார்கள். ஸ்காட்லந்து, மேற்கு—வட மேற்கு இங்கிலாந்து, அயர்லாந்தில் அல்ஸ்டர் பிர தேசம், மத்திய இங்கிலாந்தில் கவண்ட்ரி முதலிய இடங்களை, ஜெர்மன் விமானங்கள் தாக்கின. நடந்த ஆகாய விமானப்போரில், 10 ஜெர்மன் ஆகாய விமா னங்கள் வீழ்த்தப்பட்டன.

வெள்ளிக்கிழமை காலை (ஏப்ரல்மீ 18உ) வெளி யான செய்திகளில், லண்டன்மாநகரின்மேல் மிகக் கடுமையான விமானத்தாக்குதல் நடந்ததென்றும், இதுவரை அவ்வளவு கடுமையான தாக்குதல் நடக்க வில்லையென்றும், ஜெர்மன் விமானங்கள் மிகவும் கீழாகப்பறந்தனவென்றும், முதலில் நெருப்புக் குண்டுகளைப் போட்டு, பிறகு வெடிகுண்டுகளை எறிந் தனவென்றும், ஒரு ஜெர்மன் விமானம் 5,000 அடிக்குமேல் பறந்தபோது, விமான எதிர்ப்பு பீரங்கிகளால் சுட்டு சின்னபின்னம் செய்யப்பட்ட தென்றும், பிறகு பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் விமானங்களைத் துரத்திக்கொண்டு சென்றனவென் றும், மொத்தம் 6 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன வென்றும் தெரிகிறது. வடக்கு ஜெர்மனியின்மேல், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டனவென்றும், பிரெமென், பிரெஸ்ட், வில்கம்ஷேவன், கக்ஷேவன், வீசர் முண்டு முதலிய இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்ட தென்றும், பலோன் என்ற பிரான்சின் வடமேற்குக் கடற்கரைப் பட்டணத்தின்மேல் போட்ட வெடிகுண்டு கள் வெடித்தது இங்கிலாந்தின் கிழக்குக் கரை யோரத்தில் ஒரு கட்டடம் அதிர்ச்சி கொடுத்ததென் றும் தெரிகிறது. வடக்கு அயர்லாந்தில், ஜெர்மன் விமானங்கள் மிகுந்த உயிர்ச்சேதமும், பொருள் சேதமும், உண்டாகும்படியாக வெடிகுண்டுகளைப் போட்டன. இதுதான் குறிப்பாக அயர்லாந்தின்மேல் ஆரம்பித்த முதல் விமானத்தாக்குதல் என்று சொல்லலாம்.

2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

அட்டிஸ் அபாபாவைப் பிரிட்டிஷ் படைகள் பிடித் தது ஒரு பெரிய வெற்றி. இதைப்பற்றி, இடாலியச் செய்தி அறிக்கை, இடலியன் கிழக்காப்பிரிக்கா வின் தலை நகரம் இடாலியர்களால் காலி செய்யப் பட்டது என்றும், நகர மக்களைப் பாதுகாப்பதற் காகவே இம்மாதிரி செய்யப்பட்டதென்றும் கூறு கிறது.

எரீட்ரியாவில் மார்ச்சுமீ 25உயிலிருந்து இது வரைக்கும் பிடிபட்ட இடாலியர்கள் மொத்தம் 10,000 பேர். ஆப்பிரிக்காவிலும், அல்பேனியாவி லும் நடந்த சண்டையில், 2½ லட்சம் இடாலியர்கள் கைது செய்யப்பட்டு, அல்லது உயிரிழந்து, அல்லது காயம்பட்டு இருக்கிருர்கள்.

சிகப்புக்கடலில் முக்கியமான இடாலியத்துறை முகப்பட்டணமாயிருந்த மசர்வா என்பது சென்ற செவ்வாய்க்கிழமை (ஏப்ரல்மீ 8உ) பிரிட்டிஷார் கையில் சிக்கியது. பிரிட்டிஷ் துருப்புகள் முன் னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன.

அட்டிஸ் அபாபாவைப் பிடித்ததில், இந்தியத் துருப்புகளும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிருர்கள்

என்று ஒரு அரசாங்க உத்தியோக அறிக்கை அறிவித்திருக்கிறது.

அட்டிஸ் அபாபா பார்லிமெண்டு சபைக்கட்டடத்தின்மேல் மீண்டும் அபிசீனியச் சக்கிரவர்த்தியின் கொடி பறக்கிறது. அந்தக் கொடி பறக்க விடுவதற்கு முன், அங்குள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்திய துருப்புகளின் தளகர்த்தர், அபிசீனியர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்துவிட்டு, பிறகு கொடியை நாட்டினுர்.

இடாலியத் துருப்புகள், அபிசீனியத் தேசபக்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களால் துரத்தித் துரத்தியடிக்கப்பட்டன.

பகைவர்கள் தார்ஞ என்ற இடத்தையும், எல் மேகலி என்ற இடத்தையும் பிடித்துவிட்டதாக, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை அறிவித்தது. தார்ஞ ஆகாய விமானச் சாலையின்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டன. கூடாரங்கள் நெருப்புப்பற்றிக்கொண்டன.

தோப்ருக்—கசாலா ரோட்டில் போய்க்கொண்டிருந்த பகைவர்களுடைய மோடார் போக்குவரத்துப் படைகள்மேல் வெடிகுண்டுகள் போட்டதனுல், சுமார் 100 வண்டிகள் அழிக்கப்பட்டன; அநேகர் உயிரிழந்தனர்.

லிபியாவில் நடந்த சண்டையில், பகைவர்களுடைய ஆகாய விமானங்கள் 21 சுட்டு வீழ்த்தப்பட்டன. தோப்ருக்கின்மேல் பகைவர்கள் படையெடுத்து காலாட் படைகளுடனும், 'டாங்க்' கிகளுடனும் வந்ததை, பிரிட்டிஷ் துருப்புகள் தடுத்து அவர்களுக்கு அதிகமான நஷ்டத்தை உண்டாக்கிவிட்டன.

லிபியாவில், தோப்ருக்கின்மேல் பகைவர்களுடைய தாக்குதல் தடுக்கப்பட்டதென்றும், பகைவர்களுக்கு மிகுதியான சேதம் விளைவிக்கப்பட்டதென்றும், தோப்ருக்குக்கு வெளியில் இருந்த இடாலியத் துருப்புகளில், 7 இடாலிய ஆபீசர்களும், 139 இடாலிய சிப்பாய்களும் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்களென்றும், அபிசீனியாவில் தேசி என்ற இடத்தைச் சுற்றிவளைத்து பிரிட்டிஷ் சேனைகள் இருக்கின்றனவென்றும், அட்டிஸ் அபாபாவுக்கு வந்து சேர்ந்த யுத்தக் கைதிகள் இப்போது மொத்தம் 5,000 இடாலியர்களும், 4,000 குடியேற்ற நாட்டுப்படையினரும் என்றும், அல்ஜி பிரதேசத்தில், இடாலியின் குடியேற்ற நாட்டுப்படையிலிருந்து பலர் தாங்களே விலகி பிரிட்டிஷ் படைக்கு உதவிசெய்ய முயற்சி செய்கிறுர்களென்றும், லிபியாவில், திரிபோலி என்ற இடத்தை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கினவென்றும், இந்த வெள்ளிக்கிழமை காலை வெளியான செய்திகளிலிருந்து தெரிகிறது.

3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

அமெரிக்கக் கப்பல் இலாகா உதவி மந்திரி, மிஸ்டர் ஜேம்ஸ் பாரேசால், பிரிட்டனுக்குச் சென்று, பிரிட்டிஷ் கப்பல் இலாகாவுக்கும், அமெரிக்கக் கப்பல் இலாகாவுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்துவதற்காகப் போகிறுர். இதை அறிவித்த கப்பல் மந்திரி, கர்னல் நாக்ஸ், பிரிட்டனுக்காக அமெரிக்காவில் யுத்த சாமான்கள் வாங்கும் வேலையை அமெரிக்கக் கப்பல் இலாகா செய்துகொண்டு வருகிறதென்றும், பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களுக்கு பழுதுபார்க்கும் வேலையையும் செய்துவருகிறதென்றும் கூறினுர்.

அச்சுக்கப்பல்கள் கைப்பற்றப்பட்டதன் சம்பந்தமாக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சில விஷயங்களை வெளியிட்டிருக்கிறுர். கைப்பற்றப்பட்ட 30 அச்சுக் கப்பல்களும் பறிமுதல் செய்யப்படுமென்றும், 39 டேனிஷ் கப்பல்கள் வாங்கப்படுமென்றும் அவர் அறிவித்தார்.

ராணுவப் போக்குவரத்து சாதனங்களை எல்லாம் தயார்செய்து, அமெரிக்காவுக்கும், கடலுக்கப்பாலுள்ள அமெரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள இடங்களுக்கும் போவதற்கு சௌகரியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வெளியிலுள்ள அமெரிக்க ராணுவ முஸ்தீப்பு ஸ்தலங்களிலெல்லாம் ரகசியக் கட்டுப்பாடு உத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனுக்கு ஆகாய விமான எஞ்சின்கள், பீரங்கிகள், வெடிகுண்டுகள் அதிகப்படியாக அனுப்பப்பட்டு வருகிறதென்று, அமெரிக்க ராணுவ விமானப் படைத் தலைவர், மேஜர் ஜெனரல் ஆர்னுல்டு கூறியிருக்கிறுர்.

4 எஞ்சின்களுடைய "பறக்கும் கோட்டைகள்" என்ற புதுமாதிரியான ஆகாய விமானங்கள் பல அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தன. ஒவ்வொரு எஞ்சினும் 1,200 குதிரை பலமுடையது; 27,000 அடி உயரத்தில் ஒரு மணிக்கு 300 மைல் போகக்கூடியது; 220 மைல் கணக்கில் பறந்தால், 2,460 மைல் போய் திரும்பிவரும் சக்தி உடையது; மிகக் கனமான வெடிகுண்டுகளின் பாரத்தைத் தாங்கக்கூடிய சௌகரியமுள்ளது; $15\frac{1}{2}$ அடி உயரமும், 68 அடி நீளமும், 100 அடி இறக்கை அகலமும் உள்ளது; 7 அல்லது 9 பேர்கள் இந்த விமானத்தில் ஏறலாம். சீக்கிரத்தில், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையின் வெடிகுண்டு பலத்தை அதிகரிக்க இந்த "பறக்கும் கோட்டைகள்" யுத்த அரங்கங்களுக்குச் செல்லும்.

இரவு பகலாக, அதிக விளம்பரமில்லாமல், அட்லாண்டிக் மகா யுத்தம் நடந்துகொண்டு வருகிறது. இது நீண்ட யுத்தமாக நடைபெருமென்றும், பல மாதங்கள் வரைக்கும் தொடர்ந்து நடக்குமென்றும், பிரிட்டனுக்கு நேர்ந்த கப்பற்சேதங்கள் அதிகமாயிருந்தபோதிலும், அதைச் சமாளித்து முடிவில் பிரிட்டன்தான் வெற்றிபெறுமென்றும் யுத்த நிபுணர்கள் கூறுகிறுர்கள்.

ஜெர்மனியின் "யூ" சப்மரீன் கப்பல்களை அழிப்பதில், பிரிட்டிஷ் கப்பற்படை முக்கியமான கவனம் செலுத்தி வருகிறது. அட்லாண்டிக் கடலில் சில "யூ" கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. ஜெர்மன் சப்மரீன் ஆபீசர்கள் 50-க்கு மேலும், சில்லரை ஆபீசர்கள் 400-க்கு மேலும், கைது செய்யப்பட்டிருக்கிறுர்கள். அவர்களில் ஒருவர் "யூ" கப்பல் 99 என்ற பெயருடைய சப்மரீன் காப்டனுகிய, கமாண்டர் கிரேட் ஸ்மீர் என்பவர். இவர் மிகப் பிரசித்திபெற்ற ஜெர்மன் தலைவர்; ஹிட்லரால் இரண்டு தடவை பெருமைப்படுத்தப்பட்ட இவர் இப்போது பிரிட்டிஷ் கைதியாக இருக்கிறுர்.

4 கிரீசும், இடலியும்.

கிரீசுக்கும், இடலிக்கும் நடந்துகொண்டிருந்த சண்டை, இப்போது, கிரீசுக்கும், ஜெர்மனிக்கும் நடக்கும் சண்டையாய்விட்டது. கிரீசினுடைய வடக்குத்துறைமுகமாகிய சலோனீகாவை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். கிரேக்கர்கள் தைரியத்தோடு போராடி வருகிறுர்கள். ஜெர்மனியர்கள் புதுமாதிரியான 'டாங்க்' கிகளை உபயோகித்து பால்கன் மலைபிராந்த அசௌகரியங்களை ஒழிக்க முயலுகிறுர்கள். கிரீசுக்குத் துணையாயிருந்த பிரிட்டிஷ் துருப்புகள் புதிய இடங்களுக்குப்போய் அங்கிருந்து ஜெர்மானியர்களைத்தாக்க முயற்சிக்கிறுர்கள். ஜெர்மானியர்கள் இடலியிடமிருந்து கிரேக்கர்களால் ஜெயிக்கப்பட்ட அல்பேனியாவுக்குள் பிரவேசித்துவிட்டார்கள் என்றும் கிரேக்கர்கள் கோரிட்சா என்ற இடத்தைவிட்டு விலகிவிட்டார்களென்றும், புதன் கிழமை வெளிவந்த செய்திகளால் தெரியவருகிறது.

அல்பேனியாவை விட்டுக் கிரேக்க துருப்புகள் விலகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், மேற்கு மாசிடோனியாவில் ஜெர்மானியர்கள் பிரவேசித்திருக்கிறுர்களென்றும், சர்வியாவில், ஆஸ்ட்ரேலியத் துருப்புகள், ஜெர்மானியர்களைப் பலமாகத் தாக்கினவென்றும், ஐந்து ஜெர்மன் விமானங்களை ஒரு பிரிட்டிஷ் படை 'பிரென்' பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தியதென்றும், வடக்கு கிரீசில் நடக்கும் கடுமையான யுத்தத்தைப்பற்றிய புதிய விவரங்கள் இன்னும் கிடைக்க வில்லையென்றும், இந்த வெள்ளிக் கிழமை காலை வெளியான செய்திகளிலிருந்து தெரிகிறது.

5 பால்கன்ஸ்.

சென்ற சஞ்சிகை இதழில், பால்கன் பிரதேச நிலைமையைப்பற்றிக் கூறியபோது, யூகோஸ்லாவியா ஜெர்மனிக்கு எதிரிடையாக நின்று போராடும் செய்தியைக் கூறினேம். ஆனல் இவ்வாரம், யூகோஸ்லாவியா ஹங்கேரியினுடைய துரோகத்தினுல்,

துண்டாய்விட்டது. குரோஷியா என்ற மாகாணம் தனி சுதந்திர நாடாகப் பிரிந்துவிட்டது. ஜெர்மனியர்கள் சர்பியா மாகாணத்தையும் தனி நாடாகப் பிரிக்கும் எண்ணத்தில் இருப்பதாக தெரிகிறது. பல்கேரியாவும், ருமேனியாவும், யூகோஸ்லாவியாவைப் பங்குபோட்டுக்கொள்ள நினைத்து முயற்சி செய்துவருகின்றன.

ஹங்கேரியினுடைய துரோகத்தினுலும், கோழைத்தனத்தினுலும், யூகோஸ்லாவியாவில் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டன. மிஸ்டர் சர்ச்சில், யூகோஸ்லாவியாவின் தைரியத்தைப்பாராட்டி, அதனுடைய தற்கால நிலைமையைக்குறித்துத் தன் வருத்தத்தைத் தெரிவித்து, யூகோஸ்லாவியாவின் பின் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், அமெரிக்கக் குடியரசும் நின்று போர்புரிந்து கடைசியில் வெற்றி பெறும் என்று 'ரேடியோ' மூலம் கூறினர்.

யூகோஸ்லாவியாவில், ஜெர்மனியர்களை எதிர்த்துப் போர் நடக்கிறதென்றும், வேலஸ் என்ற இடத்திலிருக்கும் வர்தார் ஆற்றுப் பாலத்தை வெடி குண்டுகளால் பிரிட்டிஷ் விமானங்கள் சிதரடித்ததாகவும், அதனுல் ஜெர்மன் படைகள் முன்னேற வொட்டாமல் தடைப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும், சில்லரைச் சண்டைகளில், பட்டாளத்தில் சேராத சாதாரண ஜனங்கள் கூட, சிப்பாய்கள் பக்கத்தில் நின்று போர் புரிகிருர்களென்றும், யூகோஸ்லாவியர்கள் சரணுகதியடைந்ததாக ஜெர்மனி கூறுகிறதென்றும், இந்த வெள்ளிக்கிழமை காலைச் செய்திகள் கூறுகின்றன.

6. கப்பல் நிலைமை.

பிரிட்டிஷ் கப்பல்களுக்கு ஏராளமான சேதம் ஏற்படுத்தி விட்டதாக, ஜெர்மன் 'ரேடியோ' பிரசாரம் நடத்திக்கொண்டுவருகிறது. பொய் சொன்னுலும் பொருந்தச் சொல்லவேண்டும் என்ற யோசனையில்லாமல், முன்னுக்குப் பின் முரணுன பொய்கள் பல ஜெர்மனியால் சொல்லப்படுகின்றன. உதாரணமாக, அட்லாண்டிக் கடல் யுத்தத்தில் மூன்றும் வாரத்தில் 387,000 டன் எடையுள்ள பிரிட்டிஷ் கப்பல்களைச் சேதம் செய்ததாக ஜெர்மனி கூறுகிறது. அந்த வாரத்தில் தினந்தோறும் ஜெர்மனி சொன்ன பொய்யைக் கணக்கிட்டுக் கூட்டினுல் 422,000 டன்கள் ஆகிறது. இங்கிலாந்துக்கு அனுப்பும் 'ரேடியோ' செய்திகளில் அதிகமாகவும், மற்ற இடங்களுக்கு குறைவாகவும், பிரிட்டிஷ் கப்பல் நஷ்டங்கள் கூறப்படுகின்றன.

பிரிட்டனுக்காக 2,000 கப்பல்கள் கட்டுவதற்கு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கிறது. அமெரிக்கக் கப்பற்சாலைகளில் இந்த கப்பல்கள் கட்டப்படும். அவைகளில் 950 வர்த்தகக் கப்பல்கள் ; 913 கடற்படைக் கப்பல்கள். அமெரிக்காவின் கடற் கமிட்டித் தலைவர் இன்னும் 25 லட்சம் டன் கப்பல்கள் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்குள் கட்டி, பிரிட்டனுக்குக் கொடுக்கப்படும் என்று 'ரேடியோ' பேச்சில் கூறினுர்.

7. ஜப்பானும், சீனுவும்.

சீனுவுக்கு, வாடகை கடன் சட்டத்தின்கீழ் அமெரிக்கா யுத்த உதவி சீக்கிரம் கொடுக்கக்கூடும் என்று சீனதேச ஸ்தானீகர், அமெரிக்க அரசாங்கத்தாருடன் கலந்து பேசிய பிறகு கூறினர்.

ஜப்பானியத்துருப்புகள் இண்டோ-சீனு பிரதேசத்தில், உடன்படிக்கையில் குறிப்பிட்டதற்கு மேல் இல்லை என்ற செய்தி விஷியிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது.

சீன தேசத்துக்கு இது வரையில் உதவி செய்து கொண்டுவந்தது போல, இனிமேலும், அதாவது ரஷ்யா-ஜப்பானிய ஒப்பந்தத்தின் பிறகும், அம்மாதிரி உதவி செய்யப்படும் என்று ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின் சீனத்தலைவரான மார்ஷல் சியாங்கேஷெக்குக்குக் கூறியிருக்கிருர்.

ரஷ்யா-ஜப்பான் ஒப்பந்தத்தின் பயனுக, தெற்குச் சீனுவில், ஜப்பானியத் துருப்புகள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்கின்றனவென்றும், ஹூப்பே மலைப்பிரதேசத்தில் கடுமையான யுத்தம் நடக்கிறதென்றும், இன்று (வெள்ளிக்கிழமை) காலைச் செய்திகள் கூறுகின்றன.

8. விஷி.

விஷி அரசாங்கம், ஆப்கனிஸ்தானத்துக்கு முசியோ சாதெனெ என்பவரை ஸ்தானீகராக நியமித்திருக்கிறது. இவருக்குமுன், முசியோ கேப்ரியல்துபோனே ஸ்தானீகராக இருந்தார். ஆனுல் அவர் சென்ற ஜனவரியில் ராஜிநாமாசெய்துவிட்டு, சுதந்தர பிரான் சுக்காகப் போர்புரியும் ஜெனரல் துகாலின் படையைச் சேர்ந்து விட்டார். புதிதாக நியமிக்கப்பட்ட ஸ்தானீகர் ஆப்கனிஸ்தானின் தலை நகராகிய காபூலுக்குச் சென்று தன்னுடைய வேலையை ஒப்புக்கொண்டார்.

லவால் என்ற மாஜி பிரெஞ்சு மந்திரி, ஜெர்மனியின் முயற்சியினுல், விஷி மந்திரி சபையில் சேரக் கூடும் என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சு பிரதேசத்தில், ஜெர்மானியத் துருப்புகளுக்குப் பதிலாக, இடாலியத் துருப்புகள் வந்திருக்கின்றன. ஜெர்மன் துருப்புகள் பிரான்சைவிட்டு வெளியேறிவிட்டன.

10. நடு நிலைமை நாடுகள் : ரஷ்யா.

ரஷ்யாவும், ஜப்பானும், சென்ற ஏப்ரல்மீ 13-ம்உ ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு மணிக்கு, நடுநிலைமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. கோனேயி என்ற ஜப்பானிய முதன் மந்திரி, உலக சமாதானத்துக்கு இந்த ஒப்பந்தம் பேருதவியாயிருக்கும் என்று சொன்னுர்.

பால்கன் சண்டை.

யூகோஸ்லாவியாவைத் துண்டுபோட முயற்சி.

ஹிட்லருக்குப் பால்கன் பிரதேசத்தில் ஏராளமான சௌகரியங்கள் இருந்தன. யாதொரு காரணமும் இல்லாமல் பால்கனில் சண்டையைக் கொண்டுவந்த ஹிட்லருடைய சேனைகள் ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகளில் உள்ள முக்கியமான இடங்களைக் கைப்பற்றியிருந்தன. ஏட்ரியாடிக் கடலில் வடக்கில் பியூமி என்ற இடத்திலிருந்து சாலோநிகாவுக்கு வடக்கில் கிரேக்க தேச எல்லை வரைக்கும் ஹிட்லருடைய துருப்புகளும் ஹிட்லரின் கொள்ளைக்கூட்டக் கூட்டாளியான முசலோனியின் துருப்புகளும் யூகோஸ்லாவியாவைச் சுற்றிச்சூழ்ந்து கொண்டன. இதல்லாமல் கிரீசினுடைய எல்லையோரத்தில் ஸ்ட்ருமா என்ற ஆற்றின் பள்ளத்தாக்கிலிருந்து ஐரோப்பாவில் இருக்கும் துருக்கிப் பிரதேசம் வரைக்கும் இந்தத் துருப்புகள் பரவியிருந்தன. அல்பேனியாவில் இடாலியத் துருப்புகளோடு கிரேக்கர்கள் கடும் போராடிக்கொண்டிருந்தார்கள். இந்த நிலைமையில் 200 படைகளையுடைய ஹிட்லர் அவைகளின் பெரும் பகுதியை இரண்டு சிறு நாடுகளாகிய கிரீசின்மேலும், யூகோஸ்லாவியாவின் மேலும் ஏவக்கூடும்.

சென்ற வருஷத்தில் பிரான்சுக்கும் பெல்ஜியத்துக்கும் மத்தியில் ஜெர்மன் சேனைகளை அனுப்பி ஒன்று சேர்ந்த நாடுகளை இரண்டு துண்டாக்கி ஜெயித்த ஹிட்லரின் தந்திரம் பால்கன் பிரதேசத்திலும் கையாளப்படுகிறது. கிரேக்கர்களுக்கும் யூகோஸ்லாவியருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் பிரிப்பதற்குத்தான் சாலோநிகாவை நோக்கி ஜெர்மன் துருப்புகள் சென்றன. தங்களால் போராடிக் காக்கமுடியாத மேற்குத் திரேஸ் மாகாணத்தை விட்டுவிட்டு ரூபெல் கணவாய் என்ற முக்கியமான பிரதேசத்தை தைரியத்துடன் காத்துப் போராடினுர்கள்.

ஆனுல் ஜெர்மன் சேனே, கடுமையான போருக்குப் பிறகு, வர்தார் பள்ளத்தாக்குக்குச் சென்று, அதன் பின் சாலோநிகாவுக்குப் போய் அதைக் கைப்பற்றிக் கொண்டது. இதல்லாமல் கிரேக்கர்களால் பாது காக்கப்பட்ட ரூபெல் கணவாயையும் கைப்பற்றிக் கொண்டது. சாலோநிகா என்பது வடக்கு கிரீசுக்கும், தெற்கு சர்பியா (யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த மாகாணம்) வுக்கும், கடலுக்குச் செல்லும் வாயிற்படி போன்றது. இதனுல், யூகோஸ்லாவியாவுக்குக் கடல் மார்க்கமாக வரும் சாமான்களே ஜெர்மனி தடுத்து விட்டது. ஆனுல், பிரிட்டிஷ் கப்பற்படை, மத்திய தரைக்கடலில் பலமான ஆதிக்கம் பெற்றிருக்கிறது. ஆகையினுல் ஜெர்மனி சாலோநிகாவை அதிககாலம் பிடித்திருப்பது கஷ்டம் தான். பிடித்ததினுல் உள்ள சௌகரியங்கள் பிரிட்டிஷ் கப்பற்படையின் பலத்திற்கு முன் பிரயோசன மற்றவையாய் விடுகின்றன.

கிழக்கு மாசிடோனியாவில், கிரேக்கத் துருப்புகள் ஜெர்மானியர்களுக்கு மிகுந்த சேதம் விளேவித்தன. கிரீசின் தலே நகரான ஆதன்ஸ் மேலும், பிரீன்ஸ் மேலும் ஜெர்மன் வெடிகுண்டுகள் போட்டது அவைகளுக்கு தைரியத்தையும், தளராத எதிர்ப்பையும் கொடுத்திருக்கிறது.

யூகோஸ்லாவியாவிலும், ஜெர்மானியர்களுக்கு கடுமையான வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஆனுல் துரதிர்ஷ்ட வசமாக, யூகோஸ்லாவியாவின் முக்கிய பட்டணங்களான பெல்கிரேட், சாகரெப், இவை இரண்டும் திறந்த சமவெளிகளில் இருந்தபடியால் ஜெர்மன் வெடி குண்டுகளுக்கு, சௌகரியமான லட்சியங்களாய் விட்டன. சில உள் நாட்டுத் துரோகிகளுடைய உதவியினுல், சாகரெப் என்ற குரோட்டியர்களின் தலே நகரம் கைப்பற்றப்பட்டு, குரோஷியா என்ற சுதந்தர அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஆனுல் யூகோஸ்லாவியா அரசாங்கத்துக்கு உதவியாயிருக்கும் டாக்டர் மட்சாக் என்பவர் குரோட்டியர்களுடைய தலேவர். ஆகையால், ஹிட்லருடைய ஏற்பாடுகளெல்லாம் கடைசியில் அழிக்கப்படும் என்பது நிச்சயம்.

யூகோஸ்லாவியாவின் அரசாங்கம், பெல்கிரேட் என்ற தலே நகர் வெடிகுண்டுகளால் நாசமாகாமல் இருப்பதற்காக, அதை விட்டுவிட்டுத் தெற்கே போய் விட்டது. ஜெர்மானியர்கள், நிஷ், ஸ்கோபுல்ஜி, என்ற இடங்களேப் பிடித்துக்கொண்டார்கள். பல்கேரியாவிலிருந்து நேர் மேற்கே சென்று, யூகோஸ்லாவியாவைத் துண்டாக்குவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனுல் யூகோஸ்லாவியர்கள் தங்களுடைய முழு பலத்துடன் ஜெர்மனியர்களோடு போராடிக்கொண்டிருக்கிறுர்கள். பிரிட்டிஷாருடைய உதவியும், கிரேக்கர்களுடைய உதவியும் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்த யூகோஸ்லாவியாவின் எண்ணம் கைகூடவில்லே ; அவர்கள் தனிப்படுத்தப்பட்டார்கள். ஸ்கோபுல்ஜி என்ற இடத்துக் கருகில், 50 ஜெர்மன் ‘ டாங்கிகள் ’ உடைத்து அழிக்கப்பட்டன ; ஒரு ராணுவத் தளகர்த்தர் உட்பட அநேக ஜெர்மனியர்கள் கைதியானுர்கள். “ ஜெர்மனியினுடைய ஆரம்ப வெற்றிகள் எங்களே அதைரியப்படுத்தவில்லே ” என்று யூகோஸ்லாவிய முதன் மந்திரி ஜெனரல் சீமோவீச் உணர்ச்சியுடன் ஒரு ‘ ரேடியோ ’ பிரசங்கத்தில் கூறினுர். யூகோஸ்லாவியா, ஜெர்மனியர்களேத் தடுத்துப் போராடும் உறுதியுடன் இருக்கிறது.

ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, ஜெர்மனி, இடலி முதலிய நாடுகள் யூகோஸ்லாவியாவைப் பங்கு போட்டுக்கொள்ளும் எண்ணத்தில் இருக்கின்றன. ஆனுல் பால்கன் பிரதேசத்தில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகள் இந்த முயற்சியைத் தடுக்கும்.

கிரீசில் பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மனியர்களுடைய முற்போக்கைத் தடுத்துக்கொண்டு வருகிறது. பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியின் பேராசைகளேக் கூடிய சீக்கிரம் ஒழிக்கும் என்பதில் சந்தேகமில்லே.

ஒரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் பீரங்கிகள் சுடும்காட்சி.



மேலே படத்தில் காட்டப்பட்டிருக்கும் கப்பல், “ ஐந்தாம் ஜார்ஜ் அரசர் ” என்ற புதிய யுத்தக் கப்பல்களின் வகுப்பைச் சேர்ந்தது. இது உலகத்திலேயே அதிவேகமாகப் போகக்கூடியதும், மிகுந்த யுத்த பலம் உள்ளதுமான கப்பல். இம்மாதிரி ஐந்து பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதனுல், பிரிட்டிஷ் கப்பற்படைக்கு 170,000 டன்களும், 15 புதுமாதிரியான பெரிய பீரங்கிகளும் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படத்திலுள்ள யுத்தக் கப்பல் 14 அங்குல குறுக்களவுள்ள 10 பீரங்கிகளுடையது ; மூன்று யுத்த மூஸ்தீப்புள்ள மேடைகளின் மேல் இந்தப் பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. எப்படிப்பட்ட பெரிய யுத்தக் கப்பல் வந்தாலும் அதைத் தாக்கி நாசப்படுத்தும் பலமுடையது இந்த “ ஐந்தாம் ஜார்ஜ் அரசர் ” கப்பல். பீரங்கிகள் சுடும் காட்சியைப் படத்தில் காணலாம்.

பால்கன் நாடுகளின் படம்

அளவு 1 அங்குலம் = 112 மைல்கள்

குறிப்பு

- ஹங்கேரி கோரும் பிரதேசம்
- ரஷ்யாவுக்கு கொடுக்கப்பட்ட பிரதேசம்
- பல்கேரியா எடுத்துக்கொண்ட பிரதேசம்
- மலைகள்

Reg. No. 48/2 Copies. 9700

Heliozinco., Survey Office, Madras, 1947.

அதிதூரக் கிழக்கு அரங்கத்தின் நிலைமை.

ரஷ்யா - ஜப்பான் உடன்படிக்கை.

மாஸ்கோவில் சென்ற ஞாயிற்றுக்கிழமை, ரஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் நடுநிலைமை உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா, ரஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலின், ரஷ்ய அயல்நாட்டு மந்திரி மாலதோவ், இருவர்களுடனும் ஒரு வாரம் பேசியதின் பலன் தான் இந்த உடன்படிக்கை. இதன்படி, ஜப்பானும், ரஷ்யாவும் நேசப்பான்மையுடன் இருப்பதாகவும், அந்தந்த நாட்டின் வரையறைகளைக் கலைப்பதில்லை என்றும், வேறு எந்த தேசமாவது இரண்டு நாடுகளில் ஒன்றைத் தாக்கினால், மற்ற நாடு நடுநிலைமை வகிக்கவேண்டுமென்றும், ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. ஜப்பான் மங்கோலியாவின் எல்லைகளையும், ரஷ்யா மஞ்சூகோவின் எல்லைகளையும் கௌரவிப்பதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜப்பானிய அரச குமாரர், கோனேயி, இந்த உடன்படிக்கையை வரவேற்று, இரண்டு நாடுகளுக்கும் உள்ள சில பிரச்சினைகளை அது தீர்க்க உதவி செய்யும் என்று கூறியிருக்கிறார்.

சீனாவைப் பொறுத்தவரையில், சீயாங்கேஷேக் என்ற சீனத் தலைவர், கடைசி ஜப்பான்காரன் சீனாவை விட்டுப்போகும் வரையில், யுத்தம் நடந்துதான் தீரும் என்று முடிவு செய்திருக்கிறார். அவருக்கு அமெரிக்காவிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் உதவி வந்துகொண்டேயிருக்கிறது. ஜப்பானிய ராஜதந்திரிகள், இந்த யுத்தம் இன்னும் அதிக காலம் நடந்துதான் தீரும் என்று கூறுகிறார்கள்.

ஜப்பான், பசிபிக் மகா கடலில் ஏதாவது யுத்த சம்பந்தமான வேலைகள் செய்யுமா? ஹிட்லருடைய நோக்கம் என்னவென்றால், பசிபிக் கடலில் பிரிட்டிஷ் கடற் படையுடனும், அமெரிக்கக் கடற் படையுடனும் ஜப்பான் போர் புரிந்தால், ஜெர்மனிக்கு மேற்கு அரங்கத்தில் சில சௌகர்யங்கள் ஏற்படும் என்பது தான். அப்படி சண்டை நடந்தால், அமெரிக்காவின் யுத்த உதவிகள் பிரிட்டனுக்குப் போய்ச்சேராது என்பது முக்கியமான காரணம். ஆனால் மூன்று அச்சு வல்லரசுகள் (ஜெர்மனி, இடலி, ஜப்பான்) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதால், ஜப்பானுக்கு யாதொரு பிரயோசனமும் இல்லை. ஹிட்லரும், முசலோனியும், மத்சூகாவிடம் பேசியபோது என்ன வாக்குறுதிகள் கொடுத்தார்களோ தெரியவில்லை. ஆனால் ஜப்பான் அச்சு யுத்தத்தில் சேர்ந்தால், அமெரிக்கா சும்மா இருக்கப்போவதில்லை. ஜப்பானுக்கு அமெரிக்காவிலிருந்து எந்த சாமானும் அனுப்பக்கூடாது என்ற விதி ஏற்படும்; அப்போது ஜப்பானுக்குக் கஷ்டமான நிலைமை ஏற்படும்.

ஜப்பான் சென்ற சில மாதங்களாகச் செய்த காரியங்கள் பின் வருமாறு:—தாய்லாந்திலும், இண்டோ-சீனாவிலும், யுத்த முஸ்தீப்புத் தளங்கள் ஏற்படுத்தியது; டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து எண்ணெயும், சில இதர முக்கிய சாமான்களும், ஜப்பானுக்கு அனுப்புவதற்கு உடன்படிக்கை செய்துகொண்டது. இண்டோ-சீனாவில் ஜப்பான் தன் துருப்புகளை நிறுத்திவைத்திருக்கிறது. ஹாங்காங்குக்கு அருகிலுள்ள குவாங்சோ விரிகுடாவில் ஜப்பானியத் துருப்புகள் இறங்கியிருக்கின்றன. தெற்குச் சீனா, ஹைனன் என்ற தீவு, பிலிப்பைனுக்கருகிலுள்ள யாப், பாலோ தீவுகள், இவைகளில் துருப்புகள் தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷாரைப் பொறுத்தவரையில், மலேயாவும், சிங்கப்பூரும், பலப்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆஸ்ட்ரேலியத் துருப்புகள் சிங்கப்பூரில் தங்கியிருக்கின்றன. ஆஸ்ட்ரேலியாவின் ஆகாய விமானப் படை பலப்படுத்தப்பட்டது. சிங்கப்பூர் துறை முகத்தில் 50,000 டன் எடையுள்ள கப்பல்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பலமான பீரங்கிகள் பாதுகாப்புக்காக நிறுவப்பட்டிருக்கின்றன. பர்மாவினுடைய ராணுவப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகப்படுத்தப்பட்டன. பிரிட்டனுக்கு ஹாங்காங் இருப்பதோடு, பிஜியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் இருப்பதும் ஒரு சௌகரியம்.

அமெரிக்காவுக்குப் பல யுத்த முஸ்தீப்புத்தளங்கள் இருக்கின்றன. மேற்குக் கரையோரத்தில் சாண்டியாகோ, 2,000 மைலுக்கப்பால் ஹானோலூலு, அங்கிருந்து 2,000 மைலுக்கப்பால் வேக்தீவு, பிறகு 1,300 மைலுக்கப்பால் குவாம், ஹாங்காங்கிலிருந்து 600 மைலில் உள்ள மனிலா—இவைகள் தான் யுத்த முஸ்தீப்புத்தளங்கள். மேலும், அமெரிக்காவுக்குச் சொந்தமான அலாஸ்காவிலுள்ள துறைமுகம் ஒன்று இருக்கிறது. இவைகள் யுத்தக் கப்பல்களுக்கும், ஆகாய விமானங்களுக்கும், எண்ணெய் முதலியன 'சப்ளை' செய்வதற்கு உபயோகிக்கலாம்; அதிகதூரம் செல்லும் ஆகாய விமானங்களுக்குத் தங்குமிடமாகவும் உபயோகிக்கலாம்.

அதிதூரக்கிழக்கரங்கத்துக்கு பிரிட்டிஷ் விமானப் படைத்தலைவரான, சர் ராபர்ட்புரூக்—பாப்பம் என்பவர் ஹாங்காங், சிங்கப்பூர், மனிலா முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்குள்ள பாதுகாப்புகளைப் பார்வையிட்டார். ஹாங்காங்கிலும், சிங்கப்பூரிலும் உள்ள பாதுகாப்புகள் பிரம்மாண்டமானவை என்றும், எந்த வல்லரசாவது அங்கு யுத்தம் ஆரம்பித்தால் ஆரம்பித்த நாட்டின்பாடு மிகவும் கஷ்டமாய்விடும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஜப்பான் துணிந்து யுத்தத்தில் ஜெர்மனியுடன் சேர்ந்து போர்புரிவது கஷ்டமான காரியம். ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால், ரஷ்யா ஜெர்மனியோடு மேற்கில் கைகலக்கலாம். அச்சு வல்லரசுகள் ரஷ்யாவைத் தாக்கினால், ஜப்பான் நடுநிலைமை வகிக்கவேண்டும். எது எப்படியிருந்தாலும், பிரிட்டிஷ், அமெரிக்கப்படைகளுக்கு, பசிபிக் சமுத்திரத்தில் ஜப்பான் குறும்புத்தனம் செய்யாமல் தடுப்பதற்குப் பலமிருக்கிறது.

இந்திய துருப்புகளுக்கு அதிகமான புகழுரை.

பிரிட்டிஷ் முதன் மந்திரியின் பாராட்டு.

இந்தியர்களின் வீரத்தைப்பற்றி மிஸ்டர் அமெரி கூறியது.

வடக்கு ஆப்பிரிக்காவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் நடந்த சண்டைகளில், இந்தியத் துருப்புகள் மெச்சத் தகுந்த விதமாகப் போர்புரிந்திருக்கின்றன. அதைப்பாராட்டி, எப்ரல்மீ 9உ, பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், பார்லிமெண்டு சபையில் பேசியிருக்கிறார். எரீட்ரியாவில் "நம்முடைய இந்தியத்துருப்புகள், எல்லா சமயங்களிலும், எல்லா இடங்களிலும், இந்திய நாட்டு மக்களின் யுத்தத் திறமையின் பெருமையைக் காப்பாற்றி யிருக்கின்றன" என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

இதல்லாமல், இந்தியத் துருப்புகளைப்பற்றிப் புகழ்ந்து, மேன்மைதங்கிய வைஸ்ராய் பிரபு அவர்களுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரத்தியேகமான சங்கதி அனுப்பி யிருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது:—எரீட்ரியாவில், இந்தியத் துருப்புகள் சாதித்த காரியங்களைப்பற்றி, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் பெரு மகிழ்ச்சி கொண்டிருக்கின்றன. கேரன் என்ற இடத்தில், மலைகளின்மேல் ஏறி, கடைசியில் வெற்றி பெற்ற இந்தியத் துருப்புகளின் உற்சாகமும், விடாமுயற்சியும், இந்தியாவின் வடமேற்கு எல்லையில் நடந்த சண்டைகளை ஞாபகப்படுத்துகின்றன. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்த இந்தியச் சிப்பாய்களுடன்தான் (மிஸ்டர் சர்ச்சில்) சேர்ந்து போர்முனையில் சேவை செய்தவர் என்ற முறையில், மகா வீரத்தோடு போர் புரிந்த இந்திய சிப்பாய்களைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார்

பாராட்டிப் பெருமை கொள்ளுகிறார்கள் என்று அவர்களுக்கும், பொதுவாக இந்திய ராணுவம் முழுமைக்கும் தெரிவிக்கும்படி, மிஸ்டர் சர்ச்சில் வைஸ்ராய்க்கு எழுதியிருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இந்தியாவுக்கு மந்திரியாக இருக்கும் மிஸ்டர் அமெரி, ஏப்ரல்மீ 8-ந் தேதி செய்த பிரசங்கத்தில், இந்தியத் துருப்புகள் ஆப்பிரிக்காவில் செய்த வீரச்செயல்களைப் பாராட்டி, தானும் பேசியிருக்கிறார். கேரனிலுள்ள ஏறமுடியாத மலை யுச்சிகளிலெல்லாம் ஏறி வெற்றிபெற்ற வீரத்தை முக்கியமாக வற்புறுத்தியிருக்கிறார். கேரனில் நடந்த சண்டை, யுத்த சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான சம்பவமாக எந்தக் காலத்திலும் நிலைபெற்று இருக்குமென்றும், அந்தச் சண்டையில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் படைகள், இந்தியப் படைகள், சுதந்தரப் பிரெஞ்சு படைகள் முதலியவைகள் பெருமையுடன் ஞாபகப்படுத்திக்கொள்ளும் தன்மை உடையதென்றும், கூறினார். மேலும், இந்தியத் துருப்புகள் அஞ்சா நெஞ்சத்துடன் செய்த சில காரியங்களைப்பற்றிக் கூறி எஞ்சினீயர்கள், 'சப்ளை' செய்பவர்கள் வெடிகுண்டு படைக்காரர்கள், வைத்திய சிகிச்சைக்காக காயமடைந்தவர்களை 'ஸ்ட்ரெச்சர்' என்ற படுக்கையில் தூக்கிச் செல்பவர்கள் இவர்களெல்லாம் பொறுமை, தைரியம், கஷ்டங்களை எல்லாம் சகித்தல் ஆகிய அருமையான குணங்களை மெச்சத்தகுந்த விதமாகக் காட்டினார்கள் என்றும் புகழ்ந்து உரைத்தார்.

இவ்வளவோடு நில்லாமல், இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தை மிஸ்டர் அமெரி கூறினார், அதாவது :—"இந்தியத் துருப்புகள் ஆப்பிரிக்காவில் வெற்றிபெறச்செய்த உதவிகளும், இந்தியர்கள் யுத்த நிதிக்காகக் கொடுத்த பணவுதவியும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய குடும்ப நாடுகளோடு சம அந்தஸ்து பெறவேண்டுமென்று இந்தியா கேட்பது நியாயந்தான் என்பதை மெய்ப்பிக்கிறது."

கோழைத்தனமுள்ள ஹங்கேரி தேசம்.

யூகோஸ்லாவியாவைத்தாக்கிய கேவலமான செய்கை.

[ஹங்கேரி என்ற தேசம் ஜெர்மனிக்கும், ரூமேனியாவுக்கும் மத்தியில் உள்ளது. யூகோஸ்லாவியா என்பது, ஜெர்மனி, ஹங்கேரி, இவைகளுக்குத் தெற்கிலும், ரூமேனியாவுக்குத் தென்மேற்கிலும் உள்ள பால்கன் நாடு.]

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழியின்படி, கஷ்டங்கள் பல அனுபவித்துக் கொண்டிருக்கும் யூகோஸ்லாவியாவின்மேல், ஹங்கேரி படையெடுத்தது. இது ஜெர்மனியின் தூண்டுதலின்மேல் செய்யப்பட்ட காரியம். கேவலமானதும், துரோகமானதுமான இந்தச் செய்கைக்கு, உடன்படிக்கைகளை உடைத்து, யாதொரு காரணமுமில்லாமல் சிறு நாடுகளைத் தாக்கும் ஹிட்லர், முசலோனி, இவர்களுடைய கொடுஞ் செய்கைகளைத்தான் சமமாகச் சொல்லலாம். ஐரோப்பிய பூகோளப் படத்தைப் பார்த்தால், ஹங்கேரிக்கும், யூகோஸ்லாவியாவுக்கும், 250 மைல் தூரம் பொதுவான எல்லையிருப்பது தெரியவரும். ஹங்கேரிதான் முதன்முதலில் மூன்று வல்லரசு (ஜெர்மனி, இடலி, ஜப்பான்)களின் அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 1920-ம் ஏற்பட்ட திரியானன் உடன்படிக்கைக்குப் பிறகு, ஹங்கேரி சென்ற மகா யுத்தத்திற்குமுன் இருந்த அளவில் கால் பங்குக்குக் குறைக்கப்பட்டு, அதனுடைய ஜனத் தொகையில் 100-க்கு 60 இழக்கும்படி செய்யப்பட்டது. அப்போதிருந்து, ஹங்கேரிக்கு வேறு தேசங்களைப்பிடிக்க வேண்டுமென்ற ஆசை மிகுதியாக இருந்தது. இந்த ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு ஜெர்மனி பெரிதும் உதவி செய்தது.

1938-ம் வியன்னா சமரசத்தின்படி, ஹங்கேரிக்கு 4,600 சதுர மைல் விஸ்தீரணப் பிரதேசம் கொடுக்கப்பட்டது ; ஜனத்தொகை 10 லட்சத்து 45 ஆயிரம் அதிகமாகச் சேர்ந்தது ; 1939-ம் இன்னும் 4,960 சதுர மைல் பிரதேசம், செக்கோஸ்லோவாக்கியா என்ற ஹங்கேரிக்கு வடக்கிலுள்ள நாட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது ; இதனால் 6 லட்சத்து 72 ஆயிரம் ஜனங்கள் ஹங்கேரிக்குச் சேர்க்கப்பட்டார்கள். 1940-ம், வியன்னாவில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி, ஹங்கேரிக்கும், ரூமேனியாவுக்கும் ஜெர்மனியால் எல்லைவரையறை வகுக்கப்பட்டது. அதன்படி, டிரான்சில்வேனியா என்ற ரூமேனியா மாகாணத்தில் 45,000 சதுர மைல் விஸ்தீரணமும், 28 லட்சம் ஜனத்தொகையும், ஹங்கேரிக்குச் சேர்ந்தது. கடைத்தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைத்ததுபோல இருக்கிறது ஹிட்லரின் தானம். ஆனால், இந்தப் பிரதேசத்தில் பாதிபேர் ஹங்கேரியர்களும், பாதிபேர் ரூமேனியர்களுமாக இருக்கிறார்கள். 4 லட்சம் ஹங்கேரியர்கள் ரூமேனியாவின் எல்லைக்குள் தெற்கு டிரான்சில்வேனியாவில் இருக்கின்றார்கள்.

இதனால், இனிமேல் ரூமேனியாவுக்கும், ஹங்கேரிக்கும் சச்சரவு ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. மார்ச்சுமீ 30வ, ரூமேனியாவின் தலைவரான, ஜெனரல் அண்டோனெஸ்கு என்பவர் பின்வருமாறு கூறுகிறார் :—"இம்மாதிரியாக, ரூமேனியாவின் பிரதேசங்களை, ஹங்கேரிக்குக் கொடுத்துவிட்டதை, ரூமேனியா ஒத்துக்கொள்ளமுடியாது ; கூடிய சீக்கிரம், டிரான்சில்வேனியா பிரச்சினையைத் தீர்க்கும்படி, ஜெர்மனியையும், இடலியையும், கேட்டாக வேண்டி இருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்ந்தாலொழிய, பால்கன் பிரதேசத்தில் சமாதானம் நிலைத்திருக்காது."

ஹங்கேரியை இம்மாதிரியாக விசாலப்படுத்தியதால், ஜெர்மனிக்கு உண்டான லாபமென்ன ? ஹங்கேரியை அடிமை நாடாக்கிய பிறகு, அதற்கு அடுத்ததாக இருக்கும் போலண்டை ஜெர்மனி கைப்பற்றியது. பின்பு ஜெர்மனிக்கும், ஹங்கேரிக்கும் மத்தியிலுள்ள செக்கோஸ்லவியா பிடிக்கப்பட்டு, பங்கு போடப்பட்டது. அதன் மூலம், ரூமேனியாவும், பல்கேரியாவும் ஜெர்மனிக்கு அடிமை நாடுகளாய்விட்டன. முடிவில், ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள், யூகோஸ்லாவியாவைச் சுற்றி இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஹங்கேரியின் துருப்புகள், யூகோஸ்லாவியாவில் பிரவேசித்து சுபோடிக் என்ற முக்கியமான பட்டணத்தைக் கைப்பற்றியிருக்கிறது. இந்தப் பட்டணம் ஹங்கேரியின் தெற்கு எல்லையில் இருக்கிறது. இதை முன்பு ஹங்கேரியிடமிருந்து விலக்கி யூகோஸ்லாவியாவுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது இந்தப் பட்டணத்தை ஹங்கேரி பிடித்ததின் நோக்கமென்ன ? 1920-ம்க்குமுன், ஹங்கேரியின் எல்லைகளாயிருந்த திரேவ், தானியூப், நதிகளைச் சேர்த்து ஒரு கோடு போட்டதைப் போலுள்ள இடங்களைக் கைப்பற்றுவது தான். இது ஜெர்மனியினுடைய தூண்டுகோலின் மேல் செய்யப்பட்டது.

ஹங்கேரியின் பழைய முதன் மந்திரி, கவுண்ட் தெலீகி, அச்சு ஒப்பந்த உறவினால் கவலையதிகமாகி ஏப்ரல்மீ 3வ, தற்கொலை செய்துகொண்ட விஷயம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜெர்மனி, இம்மாதிரி கட்டாயமாகத் தொந்தரவு செய்யும் என்று அவருக்கு முன்பே தெரியும். அதனால் தான், நான்கு மாதங்களுக்கு முன்பே ஹங்கேரிக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் என்றுமழியாத நட்புரிமை ஒப்பந்தம் செய்துவைத்தார். இரு நாடுகளுக்கும் இருந்த அரசியல் விரோதத்தை நீக்கி, சமாதானமான முறையில் ஒற்றுமையும், கூட்டுறவும் உண்டாக்குவதற்காக கவுண்ட் தெலீகி பாடுபட்டார்.

ஆனால் அவர் எண்ணிய எண்ணங்களெல்லாம், ஹிட்லருடைய சூழ்ச்சிகளால் பாழாய்விட்டன. யூகோஸ்லாவியாவின் சில பாகங்களைக் கைப்பற்றும்படி, ஹங்கேரி ஜெர்மனியால் கட்டாயப்படுத்தப்பட்டது. ஹங்கேரியின் அரசாங்கத் தலைவரான, அட்

மிரல் ஹார்த்தி என்பவர் குரோஷியா என்ற மாகாணத்தை சுதந்தர அரசாங்கமாகும்படி அழைத்தார்; யூகோஸ்லாவியாவிலுள்ள தனிப்பட்ட தேசீய சமூகங்களைப் பாதுகாப்பது அவசியம் என்று ஹங்கேரி அபிப்பிராயப்படுவதாக உலகத்திற்குத் தெரிவித்தார். ஆனால் அவருடைய முடிவு, யூகோஸ்லாவியாவுக்கும், ஹங்கேரிக்கும் என்றும் அழியாத நட்புரிமை ஒப்பந்தத்திற்கு விரோதமானது.

எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்றபடி, யூகோஸ்லாவியா கஷ்டங்களுக்குட்பட்டு, சுதந்தரமிழந்து, தவிக்கும்படியான சமயத்தில், வேறொரு பால்கன் நாடாகிய ருமேனியா, யூகோஸ்லாவியாவின் மேல் போர் தொடுத்திருக்கிறது. பல்கேரியா இது தான் நல்ல சமயம் என்று நினைத்து, மேற்கே உள்ள தன்னுடைய எல்லையை யூகோஸ்லாவியாவுக்குள் கொண்டுபோக முயற்சிக்கிறது; ஸ்ட்ருமிக் என்ற பிரதேசத்தைத்தான் கைப்பற்ற விரும்புகிறது. ஆனால் பல்கேரியா தன்னுடைய துருப்புகளை இதற்காக அனுப்ப முடியுமா என்பது சந்தேகம். ஏனென்றால், துருக்கிக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும்.

யூகோஸ்லாவியா பல சமூகங்கள் அடங்கிய தேசம். சர்பியர்கள், குரோட்டியர்கள், டால்மேஷியர்கள், மாண்டிநீஜியர்கள், ஸ்லாவியர்கள், ருமேனியர்கள், அல்பேனியர்கள், பல்கேரியர்கள், மாசிடோனியர்கள் ஆகிய இந்த வகுப்புகள் யூகோஸ்லாவியாவில் வசிக்கின்றன; ஆனால் சென்ற சில மாதங்களில், ஒரு பெரிய அளவுக்கு இவைகளுள் ஒற்றுமை ஏற்பட்டது. அதனால், சிறுபான்மை வகுப்புச் சண்டைகள், வெறுப்புகள், கொடுமைகள் முதலிய ஏமாற்றுதல்களை, ஜெர்மனி யூகோஸ்லாவியாவில் செய்யமுடியாமல் போய்விட்டது.

ஹங்கேரி செய்த துரோகத்தை, ரஷ்யா வன்மையாகக்கண்டித்திருக்கிறது. என்றும் அழியாத நட்புரிமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நான்கு மாதங்களுக்குப் பிறகு, ஹங்கேரி, யூகோஸ்லாவியாவைத் தாக்கியது எந்த விதத்திலும் நியாயமானதல்ல என்று ரஷ்யா கூறியிருக்கிறது. ஹங்கேரியிலும் சிறுபான்மை வகுப்புகள் இருக்கின்றனவென்றும், அங்கும் இம்மாதிரி நிலமை ஏற்பட்டால் ஹங்கேரிக்கு எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்றும் ரஷ்யாவிலுள்ள ஹங்கேரியின் ஸ்தானீகரிடம், ரஷ்யாவின் அயல்நாட்டு உதவி மந்திரி கூறியிருக்கிறார்.

யூகோஸ்லாவியாவின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி, ஜெர்மனி பூரணமான திட்டம் போட்டு, தயாராய் வைத்திருக்கிறது. அதாவது, பூகோளப்படத்திலிருந்து யூகோஸ்லாவியாவை அடியோடு அழித்துவிடுவதுதான். சர்பியா என்ற வடகிழக்கு மாகாணம் ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருக்கும்; குரோஷியா என்ற வடக்கு மாகாணம், எட்ரியாடிச்கடலுக்கு ஜெர்மனி செல்வதற்கு ஒரு மார்க்கமாக வைக்கப்படும்; மான்டி நீக்ரோ என்ற தெற்கு மாகாணம் அல்பேனியா, மாசிடோனியா, இவைகளுடன் சேர்க்கப்பட்டு, பல்கேரியாவின் ஆட்சியின் கீழ் ஒரு தனி அடிமை நாடாக ஏற்படுத்தப்படும். ஹிட்லருடைய திட்டங்கள் எல்லாம் அடியோடு ஒழிக்கும் திட்டங்களே. இந்த இராட்சதப்பிசாசு போட்ட திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படும் என்பது பின்னால் தெரியவரும்.

மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம்.

பென்காசியைப் பற்றிய குறிப்பு.

பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், புதன்கிழமை, எப்ரல்மீ 9-ந்தேதி, ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். அதில் சில வருந்தத்தக்க விஷயங்களைப் பற்றியும், ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு நேர்ந்த தோல்வியைப் பற்றியும், தன்னுடைய சுபாவத்தின்படி மறைக்காமல், விளக்கமாகக் கூறியிருக்கிறார். பென்காசி என்ற முக்கியமான இடத்தை பிரிட்டிஷ் இழந்துவிட்டது வருந்தத்தக்கதென்றும், அதனால், பென்காசியைச் சுற்றியுள்ள, மிக உபயோகமான எண்ணெய்ச் சுரங்கச்சாலைகள் ஜெர்மானியர் கையில் அகப்பட்டுக் கொண்டன என்றும் கூறினார். சிரீநிகாவையும், ஈஜிப்டையும், காப்பாற்றுவதற்காக, பிரிட்டிஷ் படைகள் கடுமையாகப் போராடுமென்றும், இனிமேல் நடக்கும் சண்டைகளில், யுத்த முறை தான் முக்கியமாகக் கருதப்படுமே ஒழிய, பெருமையைக் காப்பாற்றுவது முக்கியமாகக் கருதப்படாதென்றும், மிஸ்டர் சர்ச்சில் விளக்கிக் காட்டினார்.

அட்லாண்டிக் மகா சமுத்திர யுத்தத்தைப்பற்றி, மிஸ்டர் சர்ச்சில் கூறியதன் சாரமாவது:—யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இது வரைக்கும், சுமார் 40 லட்சம் டன் எடையுள்ள பிரிட்டிஷ் கப்பல்களை இழந்து விட்டோம். ஆனால், 30 லட்சம் டன் எடையுள்ள அயல் நாட்டுக்கப்பல்கள், அல்லது புதிதாகச் செய்யப்பட்ட கப்பல்கள், பிரிட்டிஷ் கொடியின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அடுத்த வருஷத்துக்குள் அநேக லட்சம் டன் எடையுள்ள அமெரிக்கக் கப்பல்களும், பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கப்பல்களும், பிரிட்டிஷ் கப்பற்படையுடன் சேரும். ஜெர்மனியின் யூ-போட் என்ற கடலுக்கடியில் போகும் சப்மரீன் கப்பல்களையும், கடலின் மட்டத்தில் போகும் யுத்தக்கப்பல்களையும் எதிர்த்துப் போராடுவதற்காக, 2,000 டன் எடையுள்ளதும், நல்ல யுத்த ஆயுதங்களுடையதும், அதிக தூரம் சென்று சமாளிக்கும் தன்மையுடையதுமான லேகப் கப்பல்கள் பல அமெரிக்காவால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டன. அவைகள் சீக்கிரத்தில் தங்களுடைய வேலையைச் செய்யும்.

மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கத்தில், அயர்லாந்தைப் பற்றிக் குறிப்பிட்டார். (அயர்லாந் என்பது பிரிட்டனுக்கு அருகில் மேற்கே உள்ள ஒரு பெருந் தீவு.) பிரிட்டனுடைய கப்பற்படையும், ஆகாய விமானப் படையும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் இன்னும் அதிக தூரம் சென்று போர் புரிவது, பிரிட்டனுடைய நன்மைக்கு மாத்திரமல்லாமல், அயர்லாந்தினுடைய நன்மைக்கும்தான், என்பதை அயர்லாந்து உணரவேண்டும் என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

கிரீஸ் தேசம்

பால்கன் பிரதேசத்தில், ஹிட்லருக்கு விரோதமாக ஒற்றுமை முகப்பு ஏற்படுத்தவேண்டுமென்று பிரிட்டன் பாடுபட்டது; ஆனால் அது பலனில்லாமல் போய்விட்டது; யூகோஸ்லாவியாவின் தலை நகராகிய பெல்கிரேடில் பிரவேசிப்பதற்கு, பிரிட்டிஷ் மந்திரி, மிஸ்டர் ஈடனுக்கு யூகோஸ்லாவியா அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. ஆனால் கிரீஸ் மாத்திரம் தன்னுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடப்போவதாகவும், பிரிட்டன், துருக்கி, யூகோஸ்லாவியா முதலிய நாடுகளெல்லாம் தனக்கு உதவி செய்யாவிட்டாலுங்கூட, தன்னுடைய நாட்டைப் பாதுகாக்கப்போவதாயும், மிஸ்டர் ஈடனுக்கு அறிவித்தது. அதன் பிறகு, பிரிட்டன், கிரீசுக்கு உதவி செய்வது என்று தீர்மானித்தது என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

ஒரு மலைப்பாம்பு.

ஹிட்லர் யூகோஸ்லாவியாவைப் பிடித்ததை, ஒரு மலைப்பாம்பு ஒரு பிராணியைப் பிடித்துச் சுற்றிக் கொண்டதற்குச் சமானமாக மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கிறார். துர்நாற்றமுள்ள தன்னுடைய எச்சிலை அந்தப் பிராணியின் மேல் நக்கித்தடவி, பின்பு அதைத் தன்னுடைய உடலினால் எப்படி சுற்றிக் கொள்ளுகிறதோ, அதைப்போல், முதலில் யூகோஸ்லாவியாவின்மேல் துவேஷப் பிரசாரம் செய்து, பின்பு ஜெர்மனி அதைக் கைப்பற்றிக்கொண்டது. சுத்த அயோக்கியத்தனமான ஹிட்லருடைய செய்கையைத் தடுப்பதற்காகவே, பிரிட்டன் யூகோஸ்லாவியாவுக்கு யுத்த உதவி அளிப்பதாக வாக்களித்தது.

எரீட்ரியாவிலும், அபிசீனியாவிலும் பிரிட்டனுக்குக் கிடைத்த வெற்றிகளைப்பற்றிக் குறிப்பிட்டு, மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—“ பிரெஞ்சு தேசம் சரணாகதி அடைந்த பிறகு, கிழக்கு மத்தியப்பிரதேசத்தில் நிலைமை மோசமாக இருந்தது. பிறகு நிலைமை, ஆச்சரியப்படும்படியான அளவுக்கு அடியோடு மாறிவிட்டது பிரிட்டிஷ் துருப்புகள் எவ்வளவு இருந்தனவோ, அதற்குமேல் இடாலியச் சிப்பாய்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனிப்பட்டு நின்று, போர்புரிந்து ஜெயித்தது. சுதந்தர பிரெஞ்சுக்காரர்களும், பெல்ஜியத் துருப்புகளும் தம்மாலான உதவியைச் செய்தன.”

யூக்ரெயின்

யூக்ரெயின் என்பது பழைய போலந்துக்குக் கிழக்கிலும், ருமேனியாவுக்கு மேற்கிலும் உள்ள மிகச் செழிப்பான ரஷ்ய மாகாணம். ஹிட்லர் யூக்ரெயினின் தானியக்களஞ்சியங்களையும், காக்கசஸ் பிரதேசத்தில் உள்ள எண்ணெய்ச்சுரங்க நிலங்களையும், கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செய்வதால், பிரிட்டனுடைய பொருளாதார முற்றுகையைப் பயனில்லாமல் செய்யலாம் என்று ஹிட்லர் நினைத்திருக்கலாம். இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—

“ அட்லாண்டிக் சமுத்திர யுத்தத்தில் நாம் ஜெயித்துவிட்டோமானால், அமெரிக்காவிலிருந்து தொடர்ச்சியாக யுத்த உதவி வந்து கொண்டேயிருக்கும். அப்போது ஹிட்லர் எவ்வளவுதூரம் போனாலும், எவ்வளவு லட்சக்கணக்கான மக்களைப் புதிது புதிதாக அடிமைப்படுத்தி, கஷ்ட நிலைமையில் ஆழ்த்திவைத்தாலும், பழிக்குப் பழிவாங்கும் நியாய வாளைக் கையில் கொண்டு, ஹிட்லரைத் துரத்திக்கொண்டு போவோம்.”

அமெரிக்காவும், இந்த யுத்தமும்.

ஹிட்லருடைய எண்ணம் பாழான விவரம்.

அமெரிக்கா இந்த சமயத்தில் பிரிட்டனுக்கு மகத்தான உதவி செய்துகொண்டு வருகிறது. பத்திரிகைகளில் அந்த உதவி சம்பந்தமாக வெளிவந்த விஷயங்கள் சிலருக்கு சந்தேகத்தை உண்டாக்கியிருக்கின்றன. தான் வாக்களித்த அளவு உதவி செய்ய முடியுமா என்று சிலர் கேட்கலாம். அமெரிக்காவின் தலைவர்கள், அமெரிக்க பொது மக்களின் தீவிரமான அபிப்பிராயத்தை வெளியிடுவது என்ற முறையில் அநேக விஷயங்கள் கூறியிருக்கிறார்கள். பிரிட்டனுக்கு எவ்வளவு அதிகமாக உதவி கொடுக்க முடியுமோ அவ்வளவு உதவியும் கொடுக்கவேண்டுமென்பது அமெரிக்க மக்களின் அபிப்பிராயம். ஆனால் பல காரணங்களினால், அந்த எண்ணம் முழுவதும் நிறைவேற்றுவதற்குச் சௌகரியங்கள் இல்லை. அமெரிக்க அபிப்பிராயங்கள் சில இங்கு தரப்படுகின்றன :—வாடகை—கடன் சட்டம் என்ற பிரிட்டனுக்கு யுத்த உதவி செய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், 75 பெரிய யுத்தக் கப்பல்கள் பிரிட்டனுக்குக் கொடுக்கப்படும் ; பிரெஞ்சு கப்பல் ‘‘ நார்மண்டி ’’ யுத்த சாமான்களைப் பிரிட்டனுக்குக் கொண்டுபோவதற்கு உபயோகப்படுத்தப்படும் ; அதிசீக்கிரத்தில் 140 வர்த்தகக் கப்பல்கள் பிரிட்டனுக்கு மாற்றப்படும் ; பிரிட்டனுக்கு உணவுப் பொருள்கள், யுத்த சாமான்கள் முதலியன பத்திரமாக போவதற்கு உதவியாக அமெரிக்க யுத்த கப்பல்கள் உபயோகப்படுத்தப்படவேண்டும் ; 500 சாமான் கப்பல்கள் பிரிட்டனுக்காகக் கட்டப்போகிறார்கள் ; அமெரிக்க அரசாங்கம், பிரிட்டிஷ் கப்பற்படைக்குச் சில கப்பற்சாலை வசதிகள் கொடுக்க விரும்புகிறது ; அமெரிக்கத் துறை முகங்களில் இருக்கும் அயல் நாட்டுக் கப்பல்களைக் கைப்பற்ற, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்க பார்லிமெண்டைக் கேட்டிருக்கிறார்.

உதாரணமாக, கடைசியாகக் கூறியதை எடுத்துக் கொள்வோம். அமெரிக்கத் துறைமுகங்களில் உள்ள 69 அச்சுக் கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. இது 1916-௵ சட்டத்தின் கீழ் செய்யப்பட்டது. இதே மாதிரி சென்ற மகா யுத்தத்தில் பகைவர்களுடைய கப்பல்கள் பிடிக்கப்பட்டன. இப்படி பிடிக்கப்பட்ட கப்பல்களுக்கு நியாயமான விலையைக் கொடுத்துவிட்டால் போதும் என்று அகில தேசீய சட்டம் இடங்கொடுக்கிறது. 1915-௵ இடலி, ஜெர்மனியுடன் சமாதான முறையில் இருக்கும்போது, 37 ஜெர்மன் கப்பல்களைக் கைப்பற்றியது. பிறகு, போர்ச்சுகல், பிரேசில், பெரு, ஸ்பெயின் முதலிய நாடுகளும் இம்மாதிரியே செய்தன.

இதனால், அமெரிக்கா பகைவர்களுடைய கப்பல்களைப்பிடித்தது ஒழுங்கல்ல என்று அச்சுவல்லரசுகள் கூறுவது தவறு. அகில தேசீய சட்டத்தின் கீழ்தான் அமெரிக்கா அப்படி செய்திருக்கிறது. அமெரிக்காவின் யுத்த உதவிக் கப்பல்களை பிரிட்டனுக்கு அனுப்புவதற்குமுன், அச்சுக் கப்பல்களை அமெரிக்கா சீக்கிரம் கைப்பற்றும் என்று ஹிட்லர் எதிர்பார்த்ததுண்டு. ஆனால் அதைத் தடுப்பதற்கு முன்பே, ஜெர்மனியினுடைய யுத்தக் கப்பல்களும், இடலியின் யுத்தக்கப்பல்களும் அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது. இதனால் ஹிட்லருடைய எண்ணம் பாழாய் விட்டது.

பிரசிடெண்டு ரூஸ்வெல்ட், சிகப்புக் கடலையும், கிரேக்கத் துறைமுகங்களையும், அல்பேனியத்துறைமுகங்களையும், அமெரிக்க கப்பல்களுக்குத் திறந்துவிட்டது மிக முக்கியமானது. இதனால், ஏராளமான அளவுக்கு யுத்த சாமான்கள், ஈஜிப்டு, லிபியா, கிரீஸ் முதலிய யுத்த அரங்கங்களுக்கு அனுப்ப முடியும்.

அமெரிக்கா; ஜெர்மனிக்கு வடக்கே உள்ள டென்மார்க்கு தேசத்துடன் ஒரு உடன்படிக்கை [illegible] கொண்டது. அதன்படி அட்லாண்டிக் மகாகடலின் வடகோடியில் உள்ள கிரீன்லாந்து பிரதேசத்தில் அமெரிக்காவுக்காக, யுத்த முஸ்தீப்புத்தளம் ஏற்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைப்போல, அசோர்ஸ் என்ற தீவிலும், அமெரிக்கா ஒரு யுத்த முஸ்தீப்புத்தளம் ஏற்படுத்தப் போகிறது என்ற செய்தி அவ்வளவு நம்பத் தகுந்ததல்ல. பிரிட்டனுக்கு உதவி செய்வதற்காக, பாதுகாப்புக்கப்பல் திட்டத்தை அமெரிக்கா ஏற்படுத்த வேண்டும் என்று கர்னல் டோனவன் என்ற பிரபல அமெரிக்கர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. இந்த தைரியமான காரியத்தைச் செய்ய வேண்டும் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் தங்களுடைய ஆதரவைக் கொடுத்திருக்கின்றன. அமெரிக்காவினுடைய யுத்த முயற்சிக்கு, மிஸ்டர் சர்ச்சிலுடைய குணாதிசயங்கள் இருக்க வேண்டுமென்றும் அப்பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால், இவையெல்லாம் அபிப்பிராயங்களே ஒழிய, சட்ட பூர்வமான நடை முறைக் கொள்கையல்ல.

ஆனால், அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கு அதிகமான உதவி வந்து கொண்டே இருக்கிறதென்பதைப்பற்றி, கொஞ்சங்கூட சந்தேகப்பட வேண்டியதேயில்லை. அமெரிக்காவின் பெருந்தொழிலாகிய, மோட்டார் வண்டிகள் செய்வது, இப்போது, யுத்த ஆயுதங்களும், சாமான்களும் செய்யும் தொழிலாக மாற்றப்பட்டது. வாடகை கடன் மசோதா சட்டமான பிறகு, 90 லட்சம் டாலர்கள் (அமெரிக்க நாணயம்) பிரிட்டனுக்குக் கொடுப்பதென்று தீர்மானம் செய்யப்பட்டது ; யுத்த ஆயுத உதவிகளும் பிரிட்டனுக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் செய்யப்படும் யுத்த விமானங்களில் பாதி பிரிட்டனுக்கு வருகின்றன ; மாதாமாதம், 1,000 ஆகாய விமானங்கள் செய்யப்படுகின்றன ; இது மேலும் மேலும் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.